★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 27 முஹற 26 இதழ் 273

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13—11 82

தீபாவளி மலிவு விற்பனை!

★ காஞ்சிபுரம்-மணிப்புரி
★ வூலி-G 44 ★ பட்டுவேட்டி
★ சேட்டிங் ★ சூட்டிங்-பேபி சூட்
★ எல்லாநிற பிளவுஸ் பீஸ்கள்

நாதன் ரெக்ஸ்ரைல்ஸ்

179, நவீனசந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23691

தலைமையகம்;
அன்னராஜா ஸ்ரோர்ஸ்
தொலைபேசி: 22608.

[5048]

## மினிபஸ் 'நிலையமும்' இடமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர பஸ் நிலையப்பகுதியில் நிறுத்தப்பட்டு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சகல இடங்களுக்குமான மினிபஸ்களும் இம்மாதம் 17ம் திகதி தொடக்கம் முற்றவெளிக்கு மாற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது.

பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கு மினிபஸ்களால் இடைஞ்சல் ஏற்படுவதாக

(8-ம் பக்கம் பார்க்க)

# 83 ஜூலை 23-ல் பதவிதுறக்க

# தமிழர்விடுதலைக்கூட்டணிமுடிவு

## கூட்டாக ஒரே கடிதத்தில் ராஜினமா கையெழுத்து!

(கொழும்பு)

தற்போதுள்ள பாராளுமன்றத்தின் 6 வருட ஆட்சிக்காலம் முடிவடையும் தினத்துக்கு அடுத்த நாள் தமது எம். பி.ப் பதவிகளை ராஜினமா செய்வதென தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழு நேற்று முடிவுசெய்துள்ளது 1983ஆம் ஆண்டு ஜூலை 23ம் திகதியே கூட்டணி எம். பி,க்கள் ராஜினமாவைச் செய்வர்,

கூட்டாக ஒரே கடிதத்தில் சகல தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்களும் கையெழுத்திட்டு செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் நேற்று ஒப்படைத்தார்.

வெளிநாடு சென்றுள்ள திருகோணமலை எம். பி திரு இரா. சம்பந்தன் நாடு திரும்பியதும் இந்த ராஜினமா கடிதம் பூரணப்படுத்தப்பட்டு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும் எனத்தெரியவருகிறது. (8-ம் பக்கம் பார்க்க)

நீர்வேலி வங்கிக் கொள்ளை:

## அரச பகுப்பாளர் ஆய்வை சமர்ப்பிக்க நீதிபதி உத்தரவு

(கொழும்பு)

நீர்வேலி வங்கிக்கொள்ளை தொடர்பாக அரசாங்க பகுப்பாளர் நடாத்திய ஆய்வு அறிக்கையை நீதிமன்றத்தில் உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஸி. எல். ரி மூனமல நேற்று உத்தரவிட்டார்

எட்டாவது நாளாக நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

இவ் வழக்கில் குட்டிமணி உட்பட ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், திரு. சுனில் சில்வா நேற்று கொள்ளை சம்பந்தமாக அரசாங்க பகுப்பாளரின் முடிவுகளை மேற்கோள் காட்டினார் துப்பாக்கி, ரைபிள், அவற்றின் எண்ணிக்கை, மற்றும் கொள்ளை தொடர்பான பகுப்பாளரின் ஆய்வுகள் குறித்து பிரதி சொலிஸிட்டர் பல விடயங்களைக் குறிப்பிட்டார்.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். சத்தியேந்திரா ஆட்சேபனையொன்றைக் கிளப்பினர். பகுப்பாளரின் அறிக்கை தம்மிடம் இல்லாததால், இவ் விஷயங்கள் குறித்து எதுவும் தெரியவில்லை என்று நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

பிரஷ்நெவ் இறுதிச்சடங்கு:

## ஜனதிபதி சார்பில் ஹமீட் கலந்துகொள்வார்

(கொழும்பு)

மறைந்த சோவியத் அதிபர் பிரஷ்நேவின் இறுதிச்சடங்கின்போது ஜனதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவின் சொந்தப் பிரதிநிதியாக வெளிநாட்டு அமைச்சர் ஜனப் ஷாகுல் ஹமீட் கலந்து கொள்வார்

நல்லடக்கம் செய்யப்படும் தினமான திங்கட்கிழமை, தேசிய துக்கதினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது: அரச கட்டடங்களிலுள்ள தேசியக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிடும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி தலைமைப்பீடத்திற்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு. கே பி சில்வா இந்த அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார்.

கொழும்பிலுள்ள சோவியத் தூதரகத்தில், அனுதாபச் செய்தி எழுதுவதற்கான புத்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரஷ்நெவ் மறைவுக்கு 'அமிர்' அனுதாபம்

[கொழும்பு]

"உலகின் அமைதியை நிலைநாட்டுவதிலும், விடுதலை உணர்வுக்கு ஆதரவு அளிப்பதிலும் முன்னேடியாக விளங்கிய சோவியத் நாட்டின் ஜனதிபதி லியோனித் பிரஷ்நேவின் இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒரு பெரும் இழப்பாகும்".

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம் சோவியத ஜனதிபதி லியோனித் பிரஷ்நேவின் மறைவு குறித்து அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

திரு அமிர்தலிங்கம் தமது அனுதாபச் செய்தியில் மேலும்

[8-ம் பக்கம் பார்க்க]

## தீபாவளி விடுமுறை

'தீபாவளி' தினமான 14-11-1982 அன்று ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாகையால் 15-11-1982 அன்று மட்டும் 'ஈழநாடு' பத்திரிகை வெளிவரமாட்டாது என்பதை அறியத்தருகின்றேம்.

- நிர்வாகி

ஜனதிபதி தேர்தல்:

## ஜே.ஆரின் தெரிவை ஆட்சேபித்து ஹெக்டர் மனுதாக்கல்

(கொழும்பு)

ஜனதிபதி தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவு செய்யபட்டது செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வழங்குமாறு கோரி சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனதிபதி வேட்பாளர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்துள்ளார்

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, திரு. அத்துலத்முதலி, திரு ஹர்ஷா அபயவர்த்தன ஆகிய மூவரும் எதிர்மனுதாரர்களாக அம்மனுவில குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தலில் தமது தனிப்பட்ட நடத்தைபற்றி பொய்யான அறிக்கைகளை திரு. லலித் அத்துலத்முதலியும், திரு ஹர்ஷா அபயவர்த்தனவும் திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சம்மதத்துடன்வெளியிட்டனரென்றும், அதன் மூலம் தேர்தல் ஊழல் நடவடிக்கைகளிலும், சட்ட விரோத செயலிலும் ஈடுபட்டனரெனவும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் ஜனதிபதி பதவிக்குப் பொருத்தமானவர் யார் என்பது ரூபவாஹினி தொலைக்காட்சியில் வேட்பா

8-ம் பக்கம் பார்க்க)

"யாழ்ப்பாணத்தில்

## ஐ. நா. தினத்தை சிறப்பாகக் கொண்டாட முடியவில்லை"

— யாழ். அரசஅதிபர்

[யாழ்ப்பாணம்

"அண்மையில் நடைபெற்ற ஜனதிபதி தேர்தலால் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாடுகள் தினத்தை விமரிசையாகக் கொண்டாட முடியவில்லை" என்று யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு தேவநேசன்

[8-ம் பக்கம் பார்க்க]

## புதிய சோவியத் அதிபர்

மாஸ்கோ நவ 12

மறைந்த சோவியத் அதிபர் பிரஷ்நேவின் இடத்திற்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் நாயகமாக சோவியத் உளவறியும் பிரிவைச் சேர்ந்த அறுபத்தெட்டு வயதான திரு. யூரி அன்ரபோவ் ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(3-ம் பக்கமும் பார்க்க)

காலி வன்செயல்கள்:

## சவூதிக்கு சென்று முஸ்லிம்கள் சம்பாதித்ததனுல் பொறாமை கொண்டனர்

—சட்டத்தரணி ஹனிபா

(கொழும்பு)

"காலியிலுள்ள முஸ்லிம்கள் சவூதி அரேபியாவிற்குச் சென்று பெருந்தொகையான பணம் சம்பாதித்து நல்ல நிலையில் வாழ்வதனுல் பொருமை கொண்டவர்களே அவர்கள் வீடுகளுக்குச் சென்று கொள்ளை நடத்தியுள்ளார்கள்"

காலியில் நடைபெற்ற வன்முறை தொடர்பான விசாரணை நடத்தும் அலஸ் கமிஷன் முன்னிலையில் சட்டத்தரணி ஜனப் ஹமாபி ஹனிபா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; காலிமாவட்டத்தில் 47 பள்ளி வாசல்கள் உண்டு. காலி நகர எல்லைக்குள் 20 பள்ளிவாசல்கள் உண்டு. சினன் கொலி, ஓசனுகொடை இருபள்ளி வாசல்களும் தாக்குதலுக்குள்ளானது. காலி பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் குறைவாக இருப்பதே

8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. காணியின் விலாசம்: 14/1, துரைராசா வீதி, வண்ணார் பண்ணை, தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ஆ. பாலசுப்பிரமணியம், 37, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம். 5128

சினைப் படுத்தப்பட்டதும், பால் கொடுத்துக்கொண்டிருப்பதுமான நல்ல இன கேப்பை மாடுகள் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். சி. கனகசூரியர், மேதர்ஸ் பிளேஸ், மானிப்பாய். 5133

நாவற்குளி [பஸ் தரிப்பு நிலையம், புகையிரதநிலையம் என்பவற்றிற்கு அருகாமையிலும் அரசாங்க உணவுக்களஞ்சியத்திற்கு பின்புறமாகவும், பல தொழிற்சாலைகள், நிறுவனங்களை சுற்றுடலாக கொண்டதும், பிரதான வீதி (கண்டி வீதியிலிருந்து 50 யார் தூர பாதை கொண்டுள்ள, பாரிய தொழிற்சாலை அல்லது நிறுவனங்களை அமைக்கக்கூடிய எல்லா வசதிகளுமுடைய 60 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். L V. சிங்கராயர் ''சிற்றி மெடிக்கல்ஸ்'', ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 24191, 24192. (5123)

## விற்பனைக்கு

புதிய எண்ணை வெற்று பரல்கள் உடன் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். பெனின்சுலா, 9, கண்டி வீதி, நாவற்குளி. 5131

யாழ். மாநகரசபை எல்லைகுள் புதிய சோனக தெருவில் 35பரப்புகாணி முழுதாகவோ, துண்டுகளாகவோ விற்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பரஇல: 5077, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5077

## தேவை

அனுபவம் வாய்ந்த மெக்கானிக், எலக்றிஷன் தேவை. ஞாயிறு (14-12-82) நேரில் வரவும். 120, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 5130

சோப் விற்பனையில் கைதேர்ந்தவரும், சோப் விற்பனையை ஊக்குவிக்கக்கூடியவருமான விற்பனை பிரதிநிதி உடன் தேவை. திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிப்பவர்கள் 30-11-82 முன்பதாக தங்கள் விண்ணப்பங்களை கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். பெனின்சுலா சோப் இன்டஸ்றீஸ், 25, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 5132

## தேவை

இஸ்சு E. L. F. 350 வான் தேவை. விலை விபரங்களுடன் அறிவிக்கவும். மரபொடியுடன் கூடியது விரும்பத்தக்கது விண்ணப்பிக்க: விளம்பர இல: 5118, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 5118

## வகுப்பு

DEUTSCH- GERMAN கொழும்பு ஜேர்மன் கலாச்சார நிலையத்தில் நடத்தப்படும் பரீட்சைக்கான புதிய ஆரம்ப வகுப்புகள் 15-11-1982ல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிறது. வகுப்பு நேரங்கள் காலை 6—8 மணி, மாலை 5—8 மணி வரை. தொடர்பு: சபாநாயகம், ''றூடிக்கொட்'' 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 5139

## உதைபந்தாட்ட பயிற்சியாளர் பயிற்சி வகுப்பு

(அரியாலை)

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் பயிற்சியாளருக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வோருக்கான பயிற்சிப் பரீட்சை நவம்பர் மாதம் 21ந் திகதி நடைபெறவிருக்கிறது.

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படவிருக்கும் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெற இருப்பதால் இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும்

[7-ம் பக்கம் பார்க்க]

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

## இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கலண்டர்

ரூபா 7-90

இரகு தினக்குறிப்பு ரூபா 12/-

**சோதிட விலாச புத்தகசாலை,**

46, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24083 (5134)

மீட்கப்படாத அடைவுப் பொருட்களின்

## ஏல விற்பனை

மக்கள் வங்கி, நல்லூர்க் கிளையில் (தற்பொழுது மூடப்பட்டுள்ளது) அடைவு வைக்கப்பட்டு 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதிவரை மீட்கப்படாத நகைகள் யாவும்

1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி காலை 10-00 மணியளவில்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளைக் கட்டிடத்தில் வைத்துப்

**பகிரங்க ஏலத்தில் விற்பனை**

செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
05-11-1982 5066

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

## வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-1983

1. 1983ம் ஆண்டுக்கு பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. ஒவ்வொரு இன வகைப் பொருட்களை விநியோகிப்பதற்கு தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல்வேண்டும்.
3. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால்மூலம் மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10-12-82 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக உரிய பதிவுக் கட்டணம்/வைப்புப் பணம் ஆகியவற்றுடன் அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-1983'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல்வேண்டும்.
4. பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் பட்டியலிலிருந்து வழக்கமாகக் கேள்விகள் கோரப்படும் ஆனாலும், தேவைகளைப் பொறுத்து வேறு வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகளைப் பெற்று பொருட்களைக் கொள்வனவு செய்ய இச்சபைக்கு பூரண உரிமயுண்டு.
5. நேரகாலத்துக்கு கூறுவிலைகளை அனுப்பவோ அல்லது கட்டளைகளை நிறைவேற்றவோ தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக் கூற்றுக்கட்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதவிடத்தும், அத்தகைய வழங்குநர்களின் பதிவுகள் வழங்குநர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பதிவுக் கட்டணம், வைப்புப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பொது

| பொருட்கள் | வைப்புப்பணம் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 1. காகிதாதிகள், அச்சடித்தல் வேலைகள் | 250/- | 50/- |
| 2. அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் | 250/- | 50/- |
| 3. சுகாதாரப் பொருட்கள் (மலசலகூட, தோட்டி, வீதி வேலை ஆகியவற்றுக்கான களஞ்சியப் பொருட்கள்) கோலவுடை ஆகியன | 250/- | 50/- |
| 4. பவுசர், டிராக்டர் ஆகியவற்றுக்கான உதிரிப் பாகங்கள், மற்றும் இரும்புவகைப் பொருட்கள் | 250/- | 50/- |
| 5. அலுவலக உபகரணம், தளபாடம் ஆகியவற்றுக்கான திருத்த வேலைகள் | 250/- | 50/- |

மின்சாரம்

| பொருட்கள் | வைப்புப்பணம் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 1. மின்சேவை இணைப்புக்கள், வீதி வெளிச்சம், மின் உபநிலையங்கள் ஆகியவற்றுக்கான மின் உபகரணங்கள் | 1000/- | 100/- |
| 2. பி. வி. சி. மின் வடங்கள், கடத்திகள் | 1000/- | 100/- |
| 3. வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் மின்கம்பங்கள் | 1000/- | 100/- |

தேவநேசன் நேசையா
செயலாளர்
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
10-11-82. 5142

# V. R. V.

போக்குவரத்துச்சேவை வழங்கும்

## புதிய உல்லாசப் பயணச்சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு
தினசரி இரவு 8-00 மணி கொழும்பு—யாழ்ப்பாணம்
தினசரி இரவு 8-00 மணி யாழ்ப்பாணம்—கொழும்பு
ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூபா 60/- மட்டுமே.

கொழும்பில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்.

1
கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்
பம்பலப்பிட்டி
தொலைபேசி: 85592, 81986

2
V. R. வடிவேற்கரசன்
271, செட்டியார்தெரு,
கொழும்பு 11
தொலைபேசி: 32540, 34800

3
அஜந்தா ஹோட்டல் லிமிட்,
125, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு,
தொலைபேசி: 28089, 32769

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

1
V. R. V.
ட்ரான்ஸ்போர்ட்
சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 24162

2
றிக்கோ சுவீட் அன்ட் கிறீம்கவுஸ்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 22464
23889

பஸ் புறப்படும் நேரங்கள்:
மாலை 7-00 மணி பம்பலப்பிட்டி — கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்
மாலை 7-45 மணி கோட்டை புகையிரத நிலையம் முன்பாக
மாலை 8-00 மணி செட்டியார்தெரு, கோவிலடி

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி வெள்ளவத்தை வரை செல்லலாம்.

★ யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும் வழமை போல்
தினசரி காலை 6-00 மணிக்கு எமது சேவை நடைபெறுகின்றது.

# பிரஷ்நெவ் இறுதிச்சடங்கு 15-ல்

# 4 தினம் துக்கம் அனுஷ்டிப்பு

## புதிய அதிபர் யூரிஅந்ரபோ?

**மாஸ்கோ, நவ. 12**

**கடந்த புதன்கிழமை காலமான சோவியத் அதிபர் திரு. லியனிட் பிரஷ்நெவ்வின்இறுதிச் சடங்குகள் எதிர்வரும் திங்கட்கிழமை15-ம் திகதியன்று மாஸ்கோவில் உள்ளசெஞ்சதுக்கத்தில் நடைபெறும்.**

சோவியத அதிபரின் பூதவுடல், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் மாஸ்கோவிலுள்ள மாபெரும் மண்டபமொன்றில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிச்சடங்குகளுக்சான ஏற்பாடுகளை சோவியத் யூனியனின் ஆட்சிபீடத்தைச் சேர்ந்த திரு. யூரி அந்ரபோ மேற்கொண்டுவருகின்றார்.

இறுதிச்சடங்குகள் நடைபெறும் தினமான, எதிர்வரும் திங்கட்கிழமை யன்று திரு பிரஷ்னேவின் நல்லடக்கம் இடம்பெறும்வேளை, மாஸ்கோ உட்பட சகல சோவியத் குடியரசு மாநிலங்களிலும் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

### துக்கதினம்

சோவியத்யூனியனில் நேற்றிலிருந்து நான்கு தினங்கள் துக்கதினமாக சோவியத் தலைமைப்பீடம் பிரகடனப் படுத்தியுள்ளது.

இத்துக்கதினப் பிரகடனத்தையடுத்து வழமையான கேளிக்கைகளும், வைபவங்களும், இடைநிறுத்தப்பட்டு தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுமே தவிர தொழிற்சாலைகள் கல்விக் கூடங்கள் நிறுத்தப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டது.

இறுதிச் சடங்குகளின்போது நல்லடக்கவேளையில் மட்டும் இந்த இடங்களில் ஐந்த நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்படுமென்று தெரிவிக்கப் பட்டது.

### மாற்றமில்லை

இது இவ்வாறிருக்க அதிபர் பிரஷ்னேவ்வின் மரணத்தையடுத்து சோவியத்யூனியனின் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைகளில் எதுவித மாற்றமும் இருக்காதென சோவியத் ஆட்சிபீடம் அறிவிதுதுள்ளது. அது மேலும், தொடர்ந்து தமது நாடு சோஷலிச கொள்கைகளின் அடிப்படையில் சமரசப்போக்கு, படைகுறைப்பு ஆகியனவற்றுக்காக உழைக்குமென்று தெரிவித்துள்ளது.

சோவியத் தலைமைப்பீடம், புதிய அதிபரை எதிர்வரும் 23-ந் திகதியன்று அதன்சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யும். அதுவரை அதன் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

### புதிய அதிபர்

புதிய சோவியத் அதிபராக திரு. பிரஷ்னேவ்வின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளைக்கவனித்து வரும் திரு. யூரி அந்ரபோ தெரிவுசெய்யப் படலாமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. சோவியத்தின் ஆட்சிபீடத்தில் இவர் ஒரு சிரேஷ்ட நிர்வாகியாக இருந்து வருகின்றார் என்பது குறிப் பிடத்தக்கது.

சோவியத்யூனியனின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்பவர் இந்நாட்டில் பொதுச் செயலாளர் என்றே அழைக்கப்படுகின்றார் திரு. பிரஷ்னேவ்வும் இங்கு அவ்வாறே அழைக்கப்பட்டார்.

### சோவியத் பொறுக்காது

ஸ்டாரிலினுக்குப்பின் 18 ஆண்டுகளாக நீண்டகாலம் சோவியத்யூனியனை நிர்வகித்தவர் என்ற பெயரை திரு. பிரஷ்னேவ் பெற்றுள்ளார். கடந்த அக்டோபரில் நடைபெற்ற அக்டோபர்புரட்சிக் கொண்டாட்டவைபவமொன்றில், திரு. பிரஷ்னேவ், சோஷலிஸ கொள்கைகளை அவமதிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் நடவடிக்கைகளை சோவியத் யூனியன் தொடர்ந்து சகித்துக்கொண்டிராது என்று உரையாற்றியமை நினைவு கூரத்தக்கது. [கி]

## பிரதமர் இந்திரா நேரில் அஞ்சலி செலுத்துவார்

புதுடில்லி, நவ. 12

சோவியத் அதிபர் பிரஷ்னேவ்வின்இறுதிச்சடங்குகளி கலந்து கொண்டு பிரதமர் இந்திராகாந்தி நேரடியாகத் தமது அஞ்சலியைத் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் சோவியத் யூனியன் நல்ல தலைவர் ஒருவரையும், இந்தியா நல்ல நண்பரையும் இழந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்கட்சி ஆகியனவும் உடனடியாக தமது அங்கத்தவர்களைக்கூட்டி அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

தமிழ் நாட்டில் தி மு. க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, ''இந்தியா நல்ல நண்பர் ஒருவரை இழந்துள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளார்'

இந்தியாவின் சகல மாநில தலைநகரங்களிலும், அரசாங்க காரியாலயங்கள தொழிற்சாலைகள் ஆகியனவற்றிலும் தேசியக்கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. நேற்றும்இன்றும் தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (கி)

## அதிபர் றீகனுடன், காட்டர் போர்ட், நிக்ஸன் அனுதாபம்!

வஷிங்டன், நவ. 12

அமெரிகக அதிபர் திரு. ரொனல்ட் றீகன் சோவியத் அதிபரின் மறைவு குறித்து அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அச்செய்தியில், அவர் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளதுடன், சோவியத்து யூனியனும் தமது நாடு நல்லுறவுகளை வளர்த்துச்செல்வதில் தொடர்ந்தும் ஈடுபாடு என்றும், சேவியத்ஆட்சிபீடத்தின் புதிய தலைமை, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை தம்மிருநாடுகள் குறித்த விடயத்தில் எடுக்கவேண்டு மென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான திரு. ஜிம்மி காட்டர், திரு. ஜெரால்ட் போர்ட், திரு. நிக்ஸன் ஆகியோரும் தனுத்தனியே தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

## விநோபாவே 80மணித்தியாலங்களை உணவு மருந்துஇன்றி கழித்தார்!

புதுடில்லி, நவ. 12

கடும் சுகயீனமுற்றிருக்கும் ஆச்சார்யா விநோபாவே உணவு, மருந்துவகைகள் ஆகியனவற்றை உட்கொள்ளாது 80 மணித்தியாலங்களை இதுவரை கழித்துள்ளார் என்று பர்னூர் ஆச்சிரமம் தெரிவித்தது.

விநோபாவேயின் உடல்நிலை மோசமடைந்து வருகின்றதென்றும், நிம்மதியாகத் தூங்கமுடியாது அவஸ்தைப் படுகின்றாரென்றும் சிறுநீர் கழிப்பதிலும் சிரமத்தை எதிர்நோக்குகின்றாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

பர்னூர் ஆச்சிரமத்தில் பக்திப்பாடல்களும், பஜனைகளும் விநோபாவேயின் விருப்பத்துக்கிணங்கப் பாடப்பட்டுவருகின்றன. (கி)

## ஆசிய விளையாட்டுக்கிராமம் களைகட்டுகின்றது!

புதுடில்லி, நவ. 12

புதுடில்லியிலுள்ள ஆசிய விளையாட்டுக் கிராமம்களை கட்டத் தொடங்கியுள்ளது. ஆசியவிளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவரும் விளையாட்டு வீரர்கள் தங்கியிருப்பதற்கான விடுதிகளைக் கொண்டுள்ள இக் கிராமத்திற்கு ஆசியநாடுகள் பலவற்றின் வீரர்களும் வரத் தொடங்கியுள்ளனர்.

365 வீரர்களைக் கொண்ட தென். கொரிய விளையாட்டுக்குழுவும் 147வீரர்களைக்கொண்ட இந்தோனேஷிய விளையாட்டுக்குழுவும் இருதினங்களுக்கு முன்னர் இக்கிராமத்தில் தங்க ஆரம்பித்தன. இவர்களுடன் 600 பத்திரிகையாளர்களும் இங்கு வந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க 'ஆசிய விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்திமுடிப்பதிலேயே இந்தியாவின் கௌரவம் தங்கியுள்ளது'' என்று இந்தியப் பிரதமரின் புதல்வர் திரு ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டுகள் ஆரம்பமாகும் தினமான 19ம் திகதியன்று பஞ்சாப் தீவிரவாதிகள் குழப்பம் விளைவிக்கப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே திரு. காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். (கி)

## இறந்தோர்தொகை 370 ஆகஉயர்வு!

புதுடில்லி. நவ. 12

குஜராத்தில் வீசிய புயல் காற்றினால் பலியானவர்களின் எண்ணிக்கை 370 ஆக உயர்ந்துள்ளது.

இம்மாநிலத்தில் புயலினால் சேதமடைந்தவர்த்தகநிலையங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுமென்று இம்மாநிலமுதலமைச்சர் தெரிவித்துள்ளார். இத்துடன் புயல் வருவதை ஏற்கனவே அறிவிக்கும் 'ராடர்' கருவியொன்றை குஜராத் மாநிலத்தில் பொருத்தும்படி தாம் மத்தியஅரசை வற்புறுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்

ஆந்திரமாநிலம், குஜராத்தில் நிவாரணப்பணிகளுக்காக 5லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது (கி)

## வாலேஸா ஒரிருதினங்களில் விடுதலை? போலந்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

வார்ஸோ, நவ. 12

தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள தடைசெய்யப்பட்ட சொலிடாறிற்றி தொழிற்சங்க தலைவர் திரு. லேக் வாலேஸா இன்னும் ஒரிருதினங்களில் விடுதலை செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது

கடந்த ஆண்டு டிசம்பரில் போலந்தில் இராணுவஆட்சி அமுலுக்கு வந்ததையடுத்து திரு. வாலேஸாவும், வேறும் சில சொலிடாறிற்றி இயக்கத்தாரும் கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் என்பது குறிட்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, சொலிடாறிற்றி தொழிற்சங்கம் தடை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை, வார்ஸோவிலும், தென் போலந்து நகர்களிலும் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் நடத்தினர்.

இந்தஆர்ப்பாட்ட ஊர்வலங்களைத் தடைசெய்ய பொலிசாரும், இராணுவத்தினரும் பெருமளவில்சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். ஆயினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தளர்வடையாது ஊர்வலங்களை அரசுக்கெதிராக மேற்கொண்டனர்.

பொலிஸார் சில இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர் மீது அதிவேகத்தில் தண்ணீர் பாச்சியும், கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களை மேற்கொண்டும் ஊர்வலங்களை அடக்கமுற்பட்டனர். ஆயினும் அவர்கள் சிதறிச்சென்று மீண்டும் சிறு, சிறு கூட்டமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வார்ஸோவில் இருவருடங்களுக்கு முன்னர் சொலிடாறிற்றி தொழிற்சங்கம் ஆரம்பமான இடத்திலிருந்தே வார்ஸோநகர ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஆரம்பமாகின. (கி)

## "'கொலம்பியா' விமானத்தின் வர்த்தகப் பயணம்!

வாஷிங்டன், நவ. 12

அமெரிக்காவின் விண்வெளி விமானமான 'கொலம்பியா' தனது ஐந்தாவது பயணத்தை விரைவில் மேற்கொள்ளவிருக்கின்றது இதற்கான பரிசோதனைகள் யாவும் நேற்று முன்தினம் முடிவடைந்தன

இம்முறை 'கொலம்பியா'வின் பயணத்தில் நான்கு பேர் பங்கு பற்றுகின்றனர். இவ் விண் விமானத்தைச் செலுத்தும் இருவருடன் தனியார் விண்வெளித்துறையைசார்ந்த வேறு இருவர் பயணமாகின்றனர்.

இந்த இருவரிடமிருந்தும் 100 லட்சம் அமெரிக்க டாலர்கள் பயணக் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

கொலம்பியாவின் முதலாவது வர்த்தநோக்கிலான இப் பயணம் வெற்றிபெறும்பட்சத்தில், எதிர்காலத்தில் இத்தகைய பயணங்களை மேலும் விரிவாக்குவதென 'கொலம்பியா' நிபுணர்கள் தெரிவித்தனர். (கி)

## மணிவாக்கு

உலகம் முழுதும் கண் பார்வைக்குள் அடங்கியிருக்கிறது. ஆனல் கண்ணுக்குள் ஒரு தூசியாகிலும் புகுந்துவிடலாகாது; அங்ஙனம் உலகைப் பொருட்படுத்து; ஆனல் மனதுக்குள் உலக ஆசை புகுந்து விடலாகாது.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## ஜனதிபதி பிரெஷ்னேவ்

உலக சரித்திரத்தின் பெருமைக்கு மூன்று புதிய நாகரிகங்கள் முதன்மையாகப்பேசப்படுவது வழக்கம்; அத்லாந்திக் சமுதாயம், ரஷ்ய நாகரிகம், சீன நாகரிகம்.

தென்ஆசியாவில்திகழ்ந்த இந்து-முஸ்லிம் நாகரிகம் இவைக்குப் புறம்பானது.

நான் முன் குறிப்பிட்ட மூன்று நாகரிகங்களில், அத்லாந்திக் சமுதாயம் அமெரிக்காவின் தனிச்சிறப்பைக் கொண்டது. அடி அத்திவாரம் எதுவுமின்றி, பழமையின் பிடியிலகப்பட்டுத் தடுமாறும் எதுவித அபாயமின்றி வளர்ந்து வரும் இளம்சமுதாயம் அமெரிக்க சமுதாயம். இளமை பலம், தனிமனிதசுதந்திரம்,இவை அமெரிக்க அரசியல் சமுதாய விவகாரங்களில் இன்றும் உயிர்த் துடிப்புடன் காணப்படுகின்றன.

ரஷ்யா ஒரு பழம்பெரும் நாடு; ஆனல் சோவியத் ரஷ்ய பழமை அனைத்தையும் குழிதோண்டிப் புதைத்து ஒரு புது நாகரிகம், ஒரு புது வாழ்வு ரஷ்ய மக்களுக்கு அளித்தநாடு.

இன்றைய ரஷ்ய மக்கள் நவம்பர் 1917க்கு பின்னரே சோவியத்நாடு தோன்றியதென நினைக்கின்றனர்.

உலகில், ஓரளவிற்கு அமெரிக்காவைத் தவிர, வேறந்த நாடுகளின் தலைவர்கள், சிந்தனையாளர்கள் விஞ்ஞான தத்துவ மாமேதைகள் ரஷ்யபுரட்சியில் உருவான சோவியத் நாட்டை வியக்காதவர்கள் இலர்.

வியப்புடன் அதன் சமுதாய கோட்பாடுகளையும், கம்மியூனிச சித்தாந்தத்தையும் தத்தம் நாடுகளில் அறிமுகப்படுத்தி செயற்படுத்த அரசியல்கட்சிகளும் அமைக்க இவர்கள் அரும்பாடு பட்டிருக்கின்றனர்.

ரஷ்ய தேசத்துக்கு உரித்தான பல அரசியல் பொருளாதார, சமூகத்திட்டங்கள், நடைமுறைகள் வேற்று நாடுகளுக்குப் பொருத்தமில்லாமலிருந்தன; அதன் காரணமாக இவ்வித கட்சிகள், பல நாடுகளில்தளைக்க முடியவில்லை

இருப்பினும் அடிமை வாழ்வை அகற்ற, ஏகாதிபத்திய சுரண்டலை ஒழிக்க, தொழிலாளியின் மகத்துவத்தை உணர்த்த வறுமை, நோய், அறியாமைபோன்ற சமூகத்தீமைகளைப பரந்த தேச ரீதியில் விரட்டிவிட சோவியத் ரஷ்யாவை ஒரு கலங்கரை வெளிச்சமாகக் கொள்ளும் வழக்கம் இன்றும் நிலவுகிறது.

இன்றுமஎன்று நாம்குறிப்பிடுவது; மற்றைய நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு, அவற்றின் ஆட்சி அமைப்பை தமது தேவைக்குப் பயன்படுத்தும் 'புதுவித ஏகாதிபத்தியம்' இன்றைய உலகஅரங்கில் காட்சி அளிக்கிறது.

பழைய காலனி ஆட்சி நாடுகள் எல்லாம்பொருளாதார சுதந்திரம் அற்ற நிலையில், அவற்றிற்கு உதவி அளிக்கும் பாவனையில் தங்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் துரிதமாக வளர்க்க கங்கணம் கட்டும் மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு சவாலாக விருப்பதால், ரஷ்யா தானும், அப்கான், கம்பூச்சியா, ஆபிரிக்க நாடுகளில் தலையிட வேண்டி நேரிடுகிறது மத்திய கிழக்கு, அமெரிக்க – ரஷ்ய கயிறிழுப்பு என்ருல் அது மிகையல்ல.

மார்க்ஸ் — ஏன்ஜெல்ஸ் என்ற இரட்டை மனிதர் உண்டாக்கிய சோஷலிச தத்துவம், மாமேதைலெனினின் ஆளுமையால் ரஷ்ய புரட்சியை வெற்றியில் இட்டுச் சென்றது.

தேசத்தை கண்டிப்பான கம்யூனிச அமைப்பில் சீர் செய்த திறமை ஸ்டாலினுக்குரியது; எவ்வித எதிர்ப்பையும் களைந்தெறிந்து லட்சக்கணக்கான எதிரிகளை அழித்தொழித்து, தேசத்தின் கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில் போன்ற துறைகளில் ரஷ்யா கண்ட அற்புத வளர்ச்சி உலகனைத்தையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது.

ஹிட்லர் தொடர்ந்த யுத்தம ரஷ்ய இராணுவத்தின் அசாதாரண பலத்தையும், மக்களின் தேச பக்தியையும் உலகுக்கு பறைசாற்றியது.

ஸ்டாலினின் மறைவு 1953ல் நிகழ்ந்தபோது ஒரு தொய்வு ஏற்படுமோவென்று மக்கள் அஞ்சினர். குருஷேவின் குறுகிய காலத்தில் ஏற்பட்ட வேறுபாடுகளை மறந்தால் சோவியத் ரஷ்யாவின் தலைவிதியை 18 வருடங்களாக நிர்ணயித்த மாபெருந் தலைவர் பிரெஷ்னேவ் என்பதே. எனவே அவர்களுக்கு நாம் தலைதாழ்த்தி அஞ்சலி செலுத்துகிருேம்.

கீஸிங்கர் போன்ற அமெரிக்க தூதுவ மாயாவாதிகள் பிரெஷ்னேவ்வின் கொள்கைப் பிடியையும் கண்டிப்பான முடிவுகளையும் புரட்டிவிட முடியாமற்திணறினர்,

மார்க்ஸிய சோஷலிசத்தின் வைதிகத்தைக் கடைப்பிடித்த காரணத்தால் ஐரோப்பிய அமெரிக்க ஏகாதிபத்திய கெடுபிடிகளுக்கு எவ்வித அச்சமின்றி தக்க நேரத்தில் தகுந்த அடி கொடுத்தார் பிரெஷ்னேவ்,

இருப்பினும், உலக சமாதானத்தில், ரஷ்ய வளர்ச்சி உண்டென்ற அடிப்படை நம்பிக்கையால் அமெரிக்காவுடன் ஆயுத பரிகரண ஒப்பந்தம் செய்வதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

இறக்கும் தறுவாயில் இதுவே அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்ததால், இனிவரும் தலைவர்கள் அணு ஆயுத போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும பணியில் தங்களை அர்ப்பணிப்பதே இறந்த தலைவருக்கு செலுததும் அஞ்சலி.

# உலகஅமைதிக்காக உழைத்த மாபெரும் புரட்சியாளர்

## சோவியத் அதிபர் பிரெஷ்னேவ் மறைவுக்கு அஞ்சலி



உலக சமாதானத்தைப் பேணவும் அணு ஆயுதப் போரைத் தவிர்க்கவும் உலக அழிவை கொண்டுவரக்கூடிய நியூகினியர்(நியூட்ரன் குண்டு) போரைத் தவிர்க்கவும் தமது வாழ் நாளை அர்ப்பணித்தவர் மறைந்த தோழர் லியோனித் இலிச் பிரஷ்நேவ்,

இவர் 1906-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவர்.

தனது 9-வது வயதில் தான் வாழ்ந்த நகரப் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்றுர்.

15-வது வயதில் தகப்பன் வேலைசெய்த எஃகு ஆலையில் வேலைக்கு அமர்ந்தார். அங்கு சிறந்த தொழிலாளியாக மாத்திரம் அல்ல ஒரு தொழிற்சங்க ஊழியராகவும் கடமையாற்றினர்.

அக்டோபர் மாபெரும் புரட்சியைத் தொடர்ந்து ரஷ்யாவில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்த காலத்தில் தாம் வசித்த ஊரைவிட்டு அவரது குடும்பம் குருஸ் மாகாணத்திற்கு இடம் பெயர்ந்திருந்தது. அங்கு நில அளவையாளர் கல்லூரியில்

## எஸ். விஜயானந்தன்

(இலங்கை கம். கட்சி. யாழ். கிளை)

கல்வி பயின்று யூரல் பிரதேசத்தில் நில அளவையாளராகக் கடமையாற்றினர்

தனது 31-ம் ஆண்டில் தனது சொந்த நகரத்திற்குத் திரும்பி கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்ததுடன் உலோகவியல் சம்பந்தமான படிப்பையும் மேற்கொண்டு பட்டம் பெற்றுர் அதன் பின்னர் தூர கிழக்கில் இராணுவசேவையில் ஈடுபட்டு ஒரு டாங்கி அணிப் பிரிவில் அரசியல் கொமிஷனராகப் பணிபுரிந்தார்.

### மேயராளுர்

1937 மே மாதம் நெப்ரோ-தெஷன்ஸ் நகரில் உதவி மேயராளுர் 1939ம் ஆண்டு அப்பிராந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார செயலாளராகவும் இருந்தார். 1940 ஜூலை மாதத்தில் அப்பிராந்தியக் கைத்தொழிலை யுத்த நிலைக்கு ஏற்றவாறு மாற்ற அவருக்குப் யின் மாநாட்டில் மத்திய

பொறுப்பு வழங்கப்பட்டது.

இரண்டாவது உலகமகாயுத்தத்தில் அரசியல் கொமிஷனராகவும் வேறு பல துறைகளிலும் பல முனைகளில் கடமையாற்றி நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தினர்.

பல சந்தர்ப்பங்களில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினர். 1950-ம் ஆண்டளவில் மொல்டேவியா சோஷலிஸ குடியரசின் கம்யூனிஸ் கட்சியின் தலைவராகப் பதவியேற்றுர்.

1952-ம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் 19-வது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி

கமிட்டி உறுப்பினராகவும் அரசியல் குழு பதில் உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

1954-ம் ஆண்டில் கஸாக்ஸான் குடியரசுக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசியாகவும் பொறுப்பேற்ருர். இங்கு கன்னி நிலங்களை பண்பாடு செய்து விவசாய அபிவிருத்திக்காகத் தீவிரமாக உழைத்தார்.

### கட்சியின் காரியதரிசி

1956-ம் ஆண்டு மெண்ட்டு நகரத்திற்குத் திரும்பி அரசியல் தலைமைப்பீட உறுப்பினராகப் பதவி ஏற்று கட்சியின் காரியதரிசியாக இருந்து விண்வெளி ஆராய்ச்சி, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை வளர்ச்சித்திட்டம் ஆகியவற்றைக் கண்காணித்தார்.

18 வருடங்களாக முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடத்தையும் அத்துடன் பின்னர் நாட்டின் ஜனதிபதியாகவும் கடமையாற்றி உலக ராஜதந்திரிகளில் ஒருவராகச் சிறந்து விளங்கினர்.

இக்காலகட்டததில் 2-வது உலக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட எல்லைகளுக்குச் சர்வதேச ரீதியான அங்கீகாரத்தை வென்றெடுத்தார்.

சோஷலிஸ குடும்பநாடுகளில் தேவைப்படும் நேரமெல்லாம் முன்வந்து உதவி செய்தார் ஹங்கேரி, செக்கோஸ்லவேகியா, போலந்து ஆகிய நாடுகளில் எதிர்ப்புரட்சிகளை முறியடிப்பதற்கு உதவினர்.

வியட்னும் குடியரசின் வெற்றிக்கும், ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா ஆகிய நாடுகளின் மறுமலர்ச்சிக்கும் அவர் தலைமையிலான சோவியத் ஒன்றியமும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் ஆரம்ப காலந்தொட்டே உதவி அளித்து வருகின்றன.

ஆசியாவின் பாதுகாப்புக்காக இந்தியக் குடியரசின் 25

[5-ம் பக்கம் பார்க்க]

## 'செந்திக்கு நான் பயம்'

இலக்கிய கலாநிதி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இரசிகமணி கனக. செந்திநாதன் பற்றி பின்வருமாறு தெரியவைக்கிருர்:

நான் நவீன இலக்கிய உலகத்தையோ ஜனநாயக உலகத்தையோ தீண்டாத மிகப் பழமையான பெரியவர்கள் தொடர்பும் மதிப்பும் உள்ளவன். செந்திநாதன் அதற்கு எதிரானவர். இக்கால இலக்கிய உலகில் மூழுகித் திளைந்தவர். அப்படியிருநதும் எங்கள் தொடர்பு வளர்ந்துகொண்டே இருக்கிறது. அவர் என்னிடம் என்ன பெற்றுரோ நான் அறியேன். நான் அவரிடம் பெற்றவை அதிகம். செந்திநாதனைச் சந்திக்கும்தோறும் நவீன உலகுபற்றி விசாரிப்பேன் அவர் கணக்குப் போட்டு இந்த ஆண்டு வெளிவந்த கதைகள் இத்தனை; நாவல்கள் இத்தனை; நாடகம் இத்தனை; கவிதை இத்தனை, அவற்றுள் உயர்தரமானவை இவை என்று சொல்லுவார். நான் கேட்டுக்கொள்ளுவேன். நான் அவற்றை வாசித்துப் பார்க்க விரும்புகிறேன் என்று பெரும்பாலும் அவருக்குச் சொல்வதில்லை. சொன்னல் அவற்றையெல்லாம் கட்டிச் சுமந்துகொண்டு வந்து விடுவார் என்ற பயத்தினல் சொல்வதில்லை.''

## இரசிகமணி கனக செந்திநாதன்

'ஈழகேசரி'ப் பண்ணையிலே முளைவிட்டு, முன்னணிக்கு வந்த, பேனுமன்னர்களுள் இரசிகமணி கனக-செந்திநாதனுக்கு ஒரு தனியிடம் உண்டு. இலக்கிய அரங்குகளா? பட்டிமன்றங்களா? நூல் வெளியீடுகளா? மகாநாடுகளா? அங்கெல்லாம் அவரைக் காணமுடியும். காணிவிற்றே தமிழ் நூல்களை, ஏடுகளை, பத்திரிகைகளை வாங்கினர். பக்கம் பக்கமாய் தினம் தினம் படித்தார். படித்ததை மற்றும் சுவைஞர்களுடன் பகிர்ந்து மகிழ்ந்தார். ஒட்டுப்புத்தகங்கள் பல ஆக்கி பொன்னெனப் பேணினர். புத்தகங்கள் அவர் செல்வங்கள். அவற்றில் புதைந்த அரியவிடயங்கள் அவருண்ட ஊட்டச் சத்துக்கள். அதனல் ஆயிரம் ஆயிரமாக எளுதிக்குவிக்க முனைந்தார்; வெற்றியும் கண்டார். 'இரசிகமணி' என்றும் 'இலக்கியச் செல்வ'ரென்றும் இலக்கிய உலகம் வரவேற்றது வாழ்த்தியது.

இவரைப்புடம் செய்த பெருமைக்குரியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். பழமையில் ஊறி புதுமையை நயக்கும், ஆக்கும் உணர்வினை இவரிடைப்பாய்ச்சியவர் பண்டிதமணி. நவ எழுத்துத்துறைக்கு வழிகாட்டியவர் சோ. சிவபாதசுந்தரம் அவர்கள். ஈழகேசரியில் இவரது எழுத்தோவியங்கள் பவனி வந்தன. சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடிருந்தபோதும் கட்டுரை, விமர்சனம் ஆகியதுறைகளில் மேம்பட்டுநின்ருர். சமகால எழுத்தாளர்களை நேசித்தார் என்பதை 'ஈழத்துப்பேனு மன்னர்கள்' என்ற மகுடத்தில் நாற்பது எழுத்தாளர்களை அறிமுகம் செய்து எழுதிய கட்டுரைகள் காட்டுகின்றன. 'ஈழத்து ஒளிவிளக்குக்கள்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை, தமிழ் சமுதாயப்பிரக்ஞையுடன் வாழ்ந்த பெருமக்கள் வாழ்வைப் படம பிடிக்கின்றன. 'கவிதைக்

### ஒரு கண்ணேட்டம்

[5-ம் பக்கம் பார்க்க]

# குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவு!

[மாவிட்டபுரம்]

மருதனுமடம் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக றிமாண்டிலுள்ள சந்தேகநபர்கள் மீது இம்மாதம 16ம்திகதி குற்றப்பத்தரத்தை தாக்கல் செய்யுமாறு மல்லாகம் நீதிபதி சுன்னுகம் பொலிசாருககு உத்தரவிட்டுள்ளார்.

வடபகுதியில் இடம்பெற்ற பல கொள்ளைச்சம்பவங்களில சம்பந்தப்பட்டவரெனச் சந்தேகித்துபொலிசாரால்தேடப்பட்ட உரும்பராய் ஆனந்தன் எனப்படும் சதாசிவம் சதானந்தசிவமும், மேலும் பெரியசாமி இராசேந்திரம், சுப்பையா சபாரத்தினம், கறுப்பையா செல்வம். நடராசா பரமசிவம் ஆகியோரும் யாழ். பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளது தெரிந்ததே.

இவர்கள் மருதனுமடத்தில் இடம்பெற்ற இருகொள்ளைச் சம்பவங்களிலும் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப் பட்டதையடுத்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

மருதனுமடத்தில் ஆறுமுகம் சரஸ்வதி என்பவரது வீட்டில் இடம்பெற்ற 45 ஆயிரம் ரூபா பணம்,நகைகொள்ளை தொடர்பாகவும், எஸ். செல்வராஜா என்பவரது வீட்டில் இடம் பெற்ற 7250ரூபாய்பணம் நகை கொள்ளை தொடர்பாகவும் இவர்கள் அடையாள அணி வகுப்புக்குட்படுத்தப்பட்ட போது ஆனந்தனைத்தவிர ஏனையோர் அடையாளம் காணப் பட்டிருந்தனர்.

இந்நபர்கள் மீண்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டசமயம் இவர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யதாமதம் ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் என்னவென்று நீதிபதி திரு. சீ. வீ. விக்னேஸ்வரன் சுன்னுகம் பொலிசாரிடம் வினவினுர்.

யாழ் பொலிசாரே கிளிநொச்சிக் காட்டில் வைத்து இவர்களைக் கைதுசெய்ததாகவும், அவர்களே இவர்களைப் பற்றி விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளதாகவும் குறிப்பிட்ட சுன்னுகம் பொலிஸ் சார்ஜன்ட் திரு. துரைசிங்கம் யாழ். பொலிசாருடன் தொடர்புகொண்டு இவர்கள் பற்றிய விபரங்களை அறிந்தபின்பே குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யவேண்டியிருப்பதாலும், இவர்கள் மீது பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழேயே வழக்குத்தாக்கல் செய்யவேண்டியிருப் பதாலும் குற்றப்பத்திரம்தாக்கல்செய்ய தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நீதிபதி இம்மாதம் 16–ம் திகதி இவர்கள் மீது குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு பொலிசாரைப்பணித்தார். முதலாவது சந்தேக நபரான உரும்பராய்ஆனந்தன் சார்பில் சட்டத்தரணி ம. ஸ்ரீதரன் ஆஜராஞர்.

## ஜே. ஆர். வெற்றியும் எதிர்காலப் பிரச்னைகளும்

### சீன சஞ்சிகை விமர்சனம்

(யாழ்ப்பாணம்)

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மீண்டும் ஜனுதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது அவரது பொருளாதாரத் திட்டங்களுக்கு இலங்கை மக்கள் வழங்கியுள்ள அங்கீகாரமாகும் என 'பெய்ஜிவ் றிவிபு' என்ற சீன வாரசஞ்சிகைஎழுதியுள்ளது

''திரு. ஜயவர்த்தனவின் புதிய கொள்கைகள் பலனளித்துள்ளன. வெளிநாட்டு மூலதனம் பெருமளவில் இலங்கையில் குவிர்துசேருகின்றது. உற்பத்தி அதிகரித்து, நுகர்வுப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. 1981ம் ஆண்டு வேலையில்லாதோர் எண்ணிக்கை 8,70,000 ஆகக் குறைந்துவிட்டது.

அரிசி மானியத்தைக் குறைத்து அரிசி விலைக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதாகியது, தானியங்களின்விலைவிரைவாக அதிரித்து விவசாயிகளுக்கு வருமானத்தை அதிகரித்துள்ளது, அரசின்மீதான அவர்களின் நம்பிக்கையையும் அதிகரித்துள்து'' என்று அச் சஞ்சிகை எழுதியுள்ளது.

இருந்தபோதிலும் மேற்கத்திய நிலைமைகளின் காரணமாக இலங்கை சில சிக்கலான பிரச்னைகளை எதிர்நோக்கநேர்ந்துள்ளது. நிதி விழுக்காடுகள் 1978ம் ஆண்டிலிருந்து 1980 வரை மோசமாகியுள்ளது. இந்நிலை நீடிக்குமாஞல் உற்பத்தித்துறை மேலும் மோசமடையும். அதேசமயம் வெளிநாட்டு மூலதனம் அதிகரித்திருப்பதால் ஜவுளி உற்பத்திபோன்ற உள்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிப்படைகின்றன. சம்பளத்துக்குப் பணிபுரிவோர் பணவீக்கத்திஞல் பாதிப்படைந்துள்ளார்கள். இம்மாதிரியான பிரச்னைகள் புதுமாதிரியான சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.''

இவ்வாறு 'பெய்ஜிவ் றிவியு' எழுதியுள்ளது.

## கௌரி விரதம்

(மாவிட்டபுரம்)

கேதார கௌரி நோன்பு பூர்த்தியையொட்டி ஊரெழு அருள்மிகு மீனுட்சியம்மன் தேவஸ்தானத்தில் இம்மாதம் 15ம் திகதி விசேட அபிடேகப், பூசை ஆராதனைகள் என்பன இடம்பெற உள்ளன.

மகளிருக்கான மிக முக்கிய நோன்பாக விளங்கும் இக் கேதாரகௌரி விரதநோன்பை மேற்படி ஆலயத்தில் ஏராளமானவர்கள் அனுஷ்டித்துவந்தனர் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்திலும் கேதார கௌரி நோன்பு ஏராளமான பக்தர்களால் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது.


அன்பர்கள், ஆதரவாளர்கள அனைவருக்கும்
எமது இதயம் கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்



NATIONAL - SONY
நாஷனல் TV
சோனி TV

கறுப்பு - வெள்ளை, வர்ண தொலைக்காட்சி பெட்டிகளை மிகக்கூடிய கழிவு விலையில் பெற்றுக்கொள்ள பல வருட அனுபவமிக்க ஸ்தாபனம்

சென்னை - ரூபவாகினி நிகழ்ச்சிகளை மிகவும் தெளிவாகவும், கவர்ச்சிகரமாகவும், காணக் கூடிய வகையில் TV ஏரியல் (Antenna) அமைத்துக்கொடுக்கப்படும்.

எஸ். சின்னத்துரை அன் பிறதர்

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தந்தி: கல்கி போன் 22183 - 22184


## இரசிகமணி...

4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் கதை முத்தக்கள்' இவர் எழுதிய அரிய தொடர் கட்டுரைகள

இவரது நூல்களாக 'கவிதை வானில் ஒரு வளர்பிறை, 'மூன்ருவது கண்', 'ஈழத்துக் கவி மலர்கள்', 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி', 'பிரபந்தப்பூங்கா', 'விதியின் கை', 'வெண்சங்கு', 'கடுக்கனும் மோதிரமும்', 'ஈழமத்து கேசரி' என்பன வெளிவந்துள்ளன., 'மத்தாப்பு', 'சைவநற்சிந்தனைகள்' 'ஓவியக்கலை', 'சிறுவர் சித்திரம்', என்பவற்றை வெளியிட்டிருக்கிருர். இலக்கிய மஞ்சரி 3, 4, 5 என்பவற்றைக் கூட்டாக எழுதியுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகள் முகவுரைகள் ஏராளம்; ஏராளம், வானெலிப் பேச்சுக்கள் மூலமும் நற்கருத்துக்களைச் சுவைஞர்களுக்கு பாய்ச்சியுள்ளார்.

மக்கள் மன்றில் இவர் நிலையான இடம்பெறறமைக்கு முக்கிய காரணம் சுவையான சொல் லாடல் காரஞகவும், ரசனைமிகு பேச்சாளஞகவும் மிளிர்ந்தமை எனலாம். இவருடன் உரையாடத் தொடங்கிஞல், சினிமா, சித்திரம், நாடகம், உதைபந்தாட்டம், எழுத்து, பேச்சு, சமயம், தத்துவம் என்ற மனே நிலைக்குத்தக மாற்றி மாற்றி பேசுவார். கேட்பவர்கள் தம்மை மறந்து மணிக்கணக்காக நுகர்வர். வீட்டுக்குச் செல்பவர்களுக்கு உணவும் கொடுத்து இலக்கியத்தை ரசிப்பார்.

இவரது ரசனைமிக்க பேச்சுக்கள் யாழ்ப்பாண கிராமங்கள் அனைத்திலுமே ஒலித்துவிட்டதெனலாம். நிறுவனங்கள் மூலம் இலக்கிய ரசனையை வளர்க்கலாம் என உணர்ந்த இரசிகமணி, யாழ். இலக்கிய வட்டத்தை ஆரம்பித்தார். மாதாமாதம் இலக்கிய சர்சசைகள் கலந்துரையாடல்கள் நடந்தேறின. நூல் வெளியீடுகள் கிராமப்புறங்களில் நடைபெற வேண்டுமெனச் சிந்தித்தார். மேற்படி நிறுவன நண்பர்களைத் தூண்டி நாற்பதுக்கு மேற்பட்ட நூல்கள் நம்மததியில் நிலவிட வழிவகுத்தார். இன்றைய மதிப்பீட்டில் இலட்சரூபா பெறுமதியான நூல்கள் அவை தனது பிறந்தகமாம் குரும்பசிட்டியில் சன்மார்க்க சபை தழைத்தோங்க உதவியதுடன் அங்கும் இலக்கிய சந்திப்புக்களை ஏற்படுத்தி இலக்கிய விழிப்புணர்ச்சியை உந்திநின்ருர்.

உடல்நலத்தைப் பேணவில்லை. ஆஞல் உறங்காது எழுதிஞர் கைவிரல் ஒன்று கழட்டப்பட்ட பின்தான் கற்றை கற்றையாக எழுதிஞர். தண்டொன்றால் முடிக் கட்டிவிட்டு, மேடை மேடையாக தமிழ் முழக்கம் செய்தாராம். கால ஒன்று முழங்கால்அளவில் கழற்றபட்டது அப்போதும் விரக்தியடைந்தாரா? இல்லை, வானெலி நாடகம் எழுதிஞர். வானெலியை ஒழுங்காகக்கேட்டார். விமர்ச்சித்தார். ஒட்டுப்புத்தகங்களை செப்பனிட்டார். மரணம் அண்மித்து விட்டது என்பதை உணர்ந்த நிலையிலும் எழுத்தை விடவில்லை. இறையெய்துவதற்கு இரு மாதங்களுக்கு முன் 'என் கதை' என்ற நூலினை எழுதி முடித்தார். எழுதிஎழுதி ஓய்ந்தார். இலக்கியத்தை சத்தியமாய் நேசித்தவர்தான் இரசிகமணி. இலக்கிய உலகம் இவரை மறக்க முடியுமா?

ஏ. ரி. பொ.

## இரசிகமணி நினைவுச் சிறுகதைப்போட்டி

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்திய இரசிகமணி கனக செந்திநாதன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:

1-ம பரிசு ரூபா 200— 'அந்த அஸ்தமனங்கள் இந்த அருணுேதயங்கள்' எழுதியவர்—தாமரைச் செல்வி, குமரபுரம், பரந்தன்.

2-ம் பரிசு ரூபா 100— 'மூட்டத்திலேதான் மின்னல் களும்' எழுதியவர்—காவலூர் ஜெகநாதன்.

தகுதிப் பரிசுகள் : 'இறுதி ஆசை'—எழுதியவர் வணனை சே. சிவராசா.

'எட்டாம் திகதி' எழுதியவர் – இ. விக்கினேஸ்வரன், வவனியா. 'பூக்கள் நிறம் மாறுகின்றன' எழுதியவர் கோகிலா மகேந்திரன், தெல்லிப்பழை.

போட்டிக்கு ஈழத்தின் பல வேறு பிராந்தியங்களில் இருந்தும் முப்பதுக்கு மேற்பட்ட தரமான கதைகள் வந்துசேர்ந்தன. நடுவர்களாக திரு எஸ். சரவணபவன் (சிற்பி), திரு. இ. மகாதேவா தேவன் யாழ்ப்பாணம்), திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) கடமையாற்றினர்.

பரிசில்கள் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தஞல் இன்று சனிக்கிழமை பிற்பகல் சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறும் பெருவிழாவில் அளிக்கப்படும்.

## பாராட்டுவிழா

[அரியாலை

ஜனுதிபதியின் ''கலாசூரிய'' விருதுபெற்ற நாதசுர வித்துவான் திரு. என். கே. பத்மநாதனுக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி இசைப் பகுதியினரும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும் இணைந்து நடாத்தும்பாராட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருக்கிறது,

திரு. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கலாசூரிய என். கே. பத்மநாதனுக்கு யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையாவும், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பர். பாராட்டுப் பத்திரமும் வாசித்தளிக்கப்படும். விழாவில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## உலக

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

வருட நட்புறவு ஒரு பரந்த அஸ்திவாரமாக இருக்கிறது.

ஆசியாவின் பாதுகாப்பிற்காகவும் இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக ஆக்குவதற்கும் இடையருது உழைத்தார்.

பங்களாதேசின் சுதந்திரப் போருக்கும் ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் சுதந்திரப் போருக்கும் பல விதமான உதவிகளைச்செய்தார்.

அவர் தனது வாழ்நாளில் பெரும்பகுதியை உலகசமாதானத்திற்காக அர்ப்பணித்தார். இதன் பயஞக 3ம் உலகப் போர் தவிர்க்கப்பட்டது.

இலங்கை உலகமுற்போக்கு சக்திகளும் சமாதான சக்திகளும் தொடர்ந்துபணியாற்ற வேண்டும்.

இதனைஉறுதிப்படுத்துவதற்கு இலங்கை – சோவியத் நட்புறவு கால் நூற்ருண்டு காலத்திற்கு மேறபட்டது. இக்கால கட்டத்தில் இலங்கையில் மாஆலை, எஃகுஆலை, டயர் ஆலை முதலியன அமைக்கப்பட்டன. பல மாணவர்கள் சோவியத் உயர் கலாசாலைகளில் தொழில்நுட்பவியலாளர்களாக பயிற்றப்பட்டுவருகிருர்கள்.

அவரின் தியாக வாழ்வும் அரசியல் சாணக்கியமும், சமூக அமைப்பிற்கு அவர்ஆற்றிய பங்களிப்புக்கும் உலக பாட்டாளி வர்க்கம் சிரம் தாழ்த்தி அஞ்சலி செய்யும்.

# "மக்கள் இன்று பயங்கரமான சூழ்நிலையில் வாழவேண்டியுள்ளது"

## ஐ. நா. விழாவில் யாழ். அபிவிருத்தி சபைத்தலைவர்உரை

[யாழ்ப்பாணம்]

''இந்நாட்டிலுள்ள இனங்களுக்கிடையே தேசிய இனம் என்ற ரீதியில் பிரச்னைகள் தோன்றியுள்ளதால் மக்கள் பயங்கரமான ஒரு சூழ்நிலையில் வாழவேண்டி ஏற்பட்டுள்ளது. இது உள்நாட்டுப் பிரச்னையாக தோன்றி இன்று உலகம் முழுவதுக்கும் ஊடுருவி விட்டது இவ்வியாதி பரவினல் உலக அரங்கே பாதிக்கப்படும். இதற்கு ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் முன்னின்று சமாதான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்''.

இவ்வாறு யாழ், மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா ஐக்கிய நாடுகள் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுபேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். பரியோவான் கல்லூரியில் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் தினக் கொண்டாட்டம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா ஐக்கிய நாடுகள் தேசிய சின்னம் பொறிக்கப்பட்ட கொடியையும், யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் இலங்கைஅரசின் தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தனர்.

யாழ் அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''மூன்று வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளால் 1945ல் சான்பிரான் கோவில் உலகமே மெச்சத்தக்கதாக ஐ. நா. ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. தங்கள் கஷ்டங்களுக்கு நிவாரணம் கிடைக்குமென்ற நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் கண்ட பலன் ஏமாற்றம்தான். 'வீட்டோ' என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு பலப்பரீட்சை நடத்துகிறார்கள்.

### சமாதானம் ஏற்பட்டதா?

'கொள்கை – இலட்சியம் – நல்லெண்ணம்– சுதந்திரம் என்று பல நாடுகளில் சொல்லப்படுகிறது. உண்மையில் நாடுகளுக்கிடையில் சமாதானம் ஏற்பட்டதா? இனங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டதா? தென்வியட்னும் இஸ்ரேல், கம்பூச்சியா, ஆப்கானிஸ்தான் நாடுகளில் ஏற்பட்ட பிரச்னைகளில் இந்த ஸ்தாபனம் தலையிட்டுதோல்வி கண்டதுதான் மிச்சம், இது தொடர்பாக நேர்மையாக நடந்திருந்தால் ஒரளவு பலன் கண்டிருக்கும்.

உண்மையில் பொதுவாக தேசிய இனங்களின் இலட்சியம் நிறைவேற சுதந்திரம் அடைய நல்லெண்ணம் நிலவ இந்த ஸ்தாபனத்தால் முடியாவிட்டால் இதை ஒரு பொய்யான ஸ்தாபனம் என்றே கூற வெண்டும்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலர் திரு குலதுங்கவும் இவ்விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

யாழ். மாவட்டத்திலுள்ள வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ். பரியோவான், இந்துக்கல்லூரி, யாழ். சிங்கள மகாவித்தியாலயங்களின் மாணவ, மாணவிகளின் தமிழ்,சிங்கள,ஆங்கிலப் பேச்சுக்களும்,நடன–நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(மா)

## "இளைஞர், யுவதிகளுக்கு எதிர்காலத்தை ஏற்படுத்துவதே தேசிய மன்றத்தின் குறிக்கோள்"

கரவெட்டி)

''நாட்டில் வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதே தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் குறிக்கோளாகும்.''

இவ்வாறு வடமராட்சி–கோப்பாய் தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி செல்வி வ.. விமலேஸ்வரி புத்தூர் கிழக்கிற் ரான இளைஞர் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை புத்தூர் உப அலுவலகத்தில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் செல்வி விமலேஸ்வரி தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

''சகோதர மனப்பான்மையையும். தேசீய ஒற்றுமையையும் நாட்டுப்பற்றையும் வளர்ப்பதையே முக்கியசேவையாகக் கொண்டு இயங்கும் தேசிய இளைஞர் சேவைமன்றம் இந்த நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள். திறமைகளை வெளிக்கொணரச் செய்து அவர்களுக்கும், நாட்டிற்கும் பயன்தரக் கூடிய வகையில் வழி வகைகளைச் செய்வதையே திட்டமாகக் கொண்டுள்ளது.

கிராமங்கள் தோறும் இம்படியான இளைஞர் கழகங்கள் உருவாக்கப்படுவதனல் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சேவையைப் பரவலாக்குவதுடன் நாட்டில் வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர்,யுவதிகளுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு சுபீட்சம் மிழக வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.', என்ருர்.

'நிஸ்கோ' முகாமையாளர் செல்வி மகேஸ்வரியும்பேசினர். நிர்வாகசபைத் தெரிவும் நடந்தது.

எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு
விசேட கழிவுடன் தவணைமுறையில்
★ சொனி (Sony)
★ நாஸனல் (National)
★ சன்யோ (Sanyo)
★ சீரு (Seira) டெலிவிஷன்களை
பெற்றுக்கொள்ளவும்.
சென்னை ரூபவாகினி ஏரியல்
உத்தரவாதத்துடன் பொருத்திக்கொள்ளவும்.
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்,
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்,
யாழ்ப்பாணம்.

## மாடுகள் திருட்டு அதிகரிப்பு

[மாவிட்டபுரம்]

வலி– வடக்குப் பகுதியில் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக புகார்கள் தெரிவிக்கப் படுகின்றன.

விவசாயிகள் தமது தோட்டங்களில் கட்டி விடும் மாடுகளே அதிகமாக திருடப் படுவதாகவும், சிலசமயங்களில்வீடுகளில் கட்டி நிற்கும் மாடுகளும் இரவோடிரவாகக் திருடப் படுவதாகவும் கூறப்படுகிறது.

இரவோடிரவாக மாடுகளைத் திருடி அவற்றை வெட்டி அதிகாலையின் முன் இறச்சியாக்கி விடும் சம்பவங்கள் முன்னர் குறைவாக இருந்த போதும் இவை தற்போது அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கென்றே சில கோஷ்டிகள் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலி– வடக்கில் கடந்த சில வாரங்களில் பலரது மாடுகள் திருட்டுப் போயுள்ளனவாம். இது குறித்து மாடுகளின் உரிமையாளர்கள் கிராம சேவகர்களிடமும், காங்கேசன்துறை பொலிசிலும் புகார் செய்துள்ளனர்.

இவ்வாறு மாடுதிருடுவோர் அதிகமாக எருதுமாடுகளையே திருடுவதாகவும், சில சமயங்களில் பசு மாடுகளையும் திருடுவதாகவும் கூறப்படுகிறது.

இம்மாடுகள் திருடும் கோஷ்டியினரை கண்டு பிடிக்க காங்கேசன்துறைப் பொலிசார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## அறுந்து விழும் நிலையில் மின்சார வயர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகமான மயிலிட்டி (கிராம சபை பகுதியிலுள்ள சில இடங்களில் மின்சார வயர்கள் அறுந்து விழும் நிலையிலிருக்கின்றன.

கட்டுவன் மேற்கு 18ம் வட்டாரத்திலுள்ளநாச்சிமார்ஆலய ஒழுங்கையில் வசிப்பவர்களும், பிரயாணம்செய்பவர்களும் ஆபத்தான சூழ்நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள் இந்த ஒழுங்கையினூடாகச் செல்லும் மின்வயர்கள் உக்கிப்போய் அறுந்து விழும்நிலையிலுள்ளன.

இதுசம்பந்தமாக அபிவிருத்தி சபைத் தலைவரும், மயிலிட்டி உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளுக்கும் மின்சாரப் பகுதியினருக்கும் இப்பகுதி மக்கள் புகார்செய்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மா)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 27-ம் திகதி
சனிக்கிழமை
(13—11—82)

மேடம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் அன்பு கொண்டதாக இருக்கும் புத்திரர்களாலும் மதிப்புஉயருவதற்கு இடமுண்டு சுபதினம்.

இடபம்; ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறு விதமாக அமையக்கூடும் வந்து சேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடையேற்படலாம் திரைமறைவில் சில சூழ்ச்சிகளும் இடம்பெறும்.

மிதுனம்: திருப்திகரமான திருப்பத்திற்கு இடமுண்டு. விருந்தினர்களின் வருகைக்கும் உறவினர்களின் ஆதரவுக்கும் இடமேற்படும் பரோபகார சிந்தை மேலிடும். மகிழ்ச்சிகரமானதினம்.

கடகம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள். சிலருக்குநன்மையான இடமாற்றம் ஏற்படலாம் தெய்வத்தின் துணையுமுண்டு.

சிங்கம்: மதிப்பு உயரும். இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாக கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்சனையையும் பேச்சுவன்மையினுல் சமாளித்து விடுவீர்கள்.

கன்னி: அதிக சிந்தனை சிய தலையிடியைக் கொடுக்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம். வீணபொருள்களினல் பணம் விரயமாகலாம் அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

துலாம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல் தோன்றும். மனக்குமைச்சலினுல் வேதனைப்படுவீர் பிள்ளையொன்றின் உடல் நலம் கவலையைத் தரலாம். தெய்வ நம்பிக்கை வேண்டும்.

விருச்சிகம்: கன்னல் மொழி பேசிக் காரியத்தைச் சாதிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும். வரவேற்கவேண்டிய தினம்.

தனு: நினைத்த காரியத்தில் தடை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். சிலரின் கண்டனங்களுக்கு இலக்காகநேரிடலாம். மனத்திடம் விரும்பத்தக்கது. சகோதரவழிச் சஞ்சலமும் உண்டாம்.

மகரம்: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரிகங்களில் தனிப்புகழ் பரவும். முயற்சியால் முன்னேற்றத்திற்கும் இடமுண்டு. கல்விப்பணி செல்வாக்கை வளர்க்கும்.

கும்பம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும் எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றிகாணும்.

மீனம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும். எதிலும் விரக்திமனப்பான்மை தென்படும். வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## ஆங்கில ஆசிரியர் மன்றங்கள்

(மாவிட்டபுரம்)

ஆங்கிலக்கல்விப் போதனை தொடர்பாக ஆசிரியர்களது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெறும் நோக்குடன் கல்வி வட்டாரங்கள் தோறும் ஆங்கில ஆசிரியர்களை ஒன்றுகூட்டி ஆங்கில ஆசிரியர் மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன

இதுவரைகாலமும் ஆங்கிலக் கல்விப்போதனை தொடர்பாக பல புதிய நடைமுறைகளும், புதிய திட்டங்களும் பாடசாலைகளில் புகுத்தப்பட்டபோதும் அவை குறித்து ஆசிரியர்களுக்கு விளக்கம் அளிக்கப்படாமையினலும், அவர்களது ஆலோசனைகளை பெறப்படாமையினலும் இவற்றை நிறைவேற்ற தடங்கல்கள் ஏற்பட்டிருந்தது.

இவற்றை கருத்தில் கொண்டே கல்வி வட்டாரங்கள் தோறும் கடமைபுரியும் ஆங்கில ஆசிரியர்களை ஒன்றுதிரட்டி ஆங்கில ஆசிரியர்மன்றங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆங்கில ஆசிரியர்மன்றங்கள் மூலமாக ஆங்கிலக்கல்விப் போதனைகளை சிறப்பாக செயற்படுத்த முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

வடமாநில கல்விப்பிராந்தியத்தில் முதலாவதாக இப்படியான ஆசிரியர்மன்றம் ஒன்று உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடந்த இந்த அங்குராற்பண வைபவத்தில் உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தைச்சேர்ந்த 75க்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரிய மன்றத்தலைவராக திரு. எஸ். கே. பரஞ்சோதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் செயலாளராக திரு. அ, கந்தையாவும் (கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி) தெரிவாகினர்.

யாழ். பிரதேச ஆங்கில வட்டாரக்கல்வியதிகாரி திரு'இ.க. குலசேகரன், உடுப்பிட்டி வட்டாரக்கல்வியதிகாரி, திரு. வி கே. ஈசுவரபாதம், ஆங்கில சேவைக்காலப்பயிற்சி ஆலோசகர். திரு. க. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் போஷகர்களாக இருந்து இம்மன்றத்தை வழிநடத்துவார்கள்.

# வெளிநாடு செல்லும் ரூமேனியருக்கு அந்நாட்டு அரசு விதித்துள்ள நிபந்தனே!

புக்காரஸ்ட் நவ. 11. ''ரூமேனியர்கள் தமது தாய் நாட்டைவிட்டு வெளியேறி பிறநாடுகளில் வாழ்வதாயின் அவர்களுக்காக அரசு செலவிட்ட கல்விக்கான செலவீனங்களேயும், அவர்களில் தங்கியிருப்போருக்கான பராமரிப்புச் செலவீனங்களேயும் அரசுக்குச் செலுத்தவேண்டும்''.

ரூமேனியர்கள் வெளிநாடுகளில் குடியேறுவது தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட தடைச்சட்டத்தில் இவ்வாறு ரூமேனியா அரசு கூறியிருக்கிறது. இத்தடைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

'வெளிநாடுகளில் குறிப்பிட்ட வதிவுகால எல்லேயைக் கடந்து தங்கியிருப்போர்களுக்காக அரசு செலவிட்ட கல்விக்கான செலவீனங்களைத் திருப்பிப்பெற அவர்கள்மீது வழக்குத் தொடரவுள்ளது. தற்போது ரூமேனியாவை விட்டு வெளிநாடுகளில் வாழவிரும்புவோரின்சொத்துரிமைகளே அரசுடமையாக்கப்படும்.

ஒய்வு பெற்றுள்ள ரூமேனியர்கள் பிறநாடுகளில் குடியேற விரும்பின் தமது கல்விச் செலவீனங்களே அரசுக்குத்திருப்பிக் கொடுப்பதுடன் தமதுஒய்வூதியத்தையும் கைவிட்டுச் செல்ல வேண்டும்.''

இத்தகைய தடையை செக்கோஸிலவாக்கியாவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே. (உ)

## யாழ். அரச அதிபர் திறந்துவைத்தார்

(யாழ்ப்பாணம்)

ட்ரான்ஸ்லங்கா மார்க்கெற்றிங் லிமிட்டெட் நிறுவனத்தை யாழ். மாவட்ட செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேநேசன் நேசையா திறந்து வைத்துள்ளார்.

யாழ். புதிய நவீன சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள ஸ்தாபனத்தில் 'ஆர்பிகோ' உற்பத்திப்பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. (மா.)

## உதைபந்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சாத்திகளுக்கு இப்பயிற்சிப் பரீட்சை நடாத்த யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இப் பரீட்சைக்கான ஏற்பாடுகளேச் சங்கச் செயலாளர் செய்துள்ளார்.

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

அரியாலே

இளவாலே சென்ற். ஹென்றீஸ் கல்லூரிக்கும் யாழ். பரியோவான்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் சென்ற் ஹென்றீஸ் கல்லூரி 5; 2 கோல்களால் வெற்றியீட்டியது.

2ம் பிரிவுக்கான போட்டியில் பரி. யோவான் கல்லூரி 2: 1 கோல்களால் வெற்றியீட்டியது. போட்டிகள் சென்ற் ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


## ஸ்கந்தசஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணே ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதசுவாமியின் ஸ்கந்த சஷ்டி திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

தினமும் காலே 7-15மணிக்கு ஸ்நபனுபிஷேகமும், 8-30 மணிக்குபூஜையும்,தொடர்ந்து திருச்செந்தூர்ப் புராணபடனமும், மாலே 5-30 மணிக்கு ஷண்முகார்ச்சனேயும், இரவு 7-15 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், உள்வீதிவலம் வருதலும் நடைபெறும்.

இம்மாதம் 22-ந்திகதி காலே அபிஷேகம், பூஜை முதலியன நடைபெற்று மாலே திருக்கலியாணமும், சுவாமி வெளி வீதி வலம்வருதலும் இடம் பெறும்.



## ஜே. பியாக நியமனம்

ஈச்சமோட்டையைச் சேர்ந்த ஒய்வுபெற்ற கிராமசேவையாளர் திரு. ஜோசப் எட்மன் செபஸ்தியாம்பிள்ளே யாழ் நீதிபதி திரு. ரி.ஜோகநாதன் முன்னிலேயில் யாழ். மாவட்டச் சமாதான நீதவானுகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

32 ஆண்டுகளாகக் கொழும்புத்துறை கிழக்கு, மேற்கு, சுண்டிக்குழி, இரணேதீவு, கிளிநொச்சி, குருநகர் ஆகிய கிராமங்களில் கிராமத்தலேமைக்காரராகவும் சிறப்புறப்பணியாற்றி ஒய்வு பெற்றுள்ள இவர் ஈச்சமோட்டை ஐக்கிய ஜனசமூக நிலேயத் தலேவராகவும், கிராமோதய சபை உறுப்பினராகவும். ப. நோ, கூ. ச. கிளேத்தலேவராகவும் பணியாற்றிவருகிறுர்

இவரது சேவையையும் ஜே. பி. பதவி கிடைத்தமையையும் பாராட்டி முன்னுள் யாழ். மாநகரசபை உறுப்பினரும் விசேட சேவை அதிகாரியுமான திரு. ம. சுந்தரலிங்கம் செய்தி வெளியிட்டுள்ளார்.

## யாழ்ப்பாண பொதுச்சந்தை குத்தகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லேக்குள் இருக்கும் பொதுச்சந்தைகளின் 83-ம்ஆண்டுக்கான குத்தகையை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் கோரவுள்ளது.

யாழ். பெரியகடை, நல்லூர், சின்னக்கடை ஆகிய மூன்று பொதுச்சந்தைகளும் இதுவரைகாலமும் தனிநபர்களே குத்தகைக்கு எடுத்திருந்தனர்

இச்சந்தைகளில் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகள்கூட குத்தகைக்காரர்களின் கெடுபிடிகளால் பாதிக்கப்படுவதை உணர்ந்து யாழ். ப. நோ. கூ.சங்கம் இச்சந்தைகளேக்குத்தகைக்கு எடுப்பதாகத் தெரிவித்துள்ளது. இதனுல் படித்த இளேஞர்கள் சிலருக்குவேலேவாய்ப்புக்கிடைப்பதுடன், வியாபாரிகளும் நன்மையடைய வழிபிறக்கும் என்றும். ப. நோ. கூ. ச பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (மா)


நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்
**பதவி வெற்றிடம்**
வர்த்தகமுகாமையாளர்
தரம் 106:9

கீழ்க் குறிப்பிடப்படும் தராதரம் உள்ளவர்களிடமிருந்து வர்த்தக முகாமையாளர் பதவிக்கு கூட்டுறவு வேலேயாளர் 102/81 இலக்கச் சுற்றுநிருபத்திற்கிணங்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களேத் தலேவர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 20-11-82ம் திகதிக்குமுன்போ அல்லது அன்றோ கிடைக்கக் கூடியதாக சான்றுப்பத்திரப் பிரதிகளுடன் அனுப்பிவைத்தல்வேண்டும்.

தராதரம்

கூட்டுறவுச் சங்க ஊழியர் 10-ம் சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 (பதினெராம்) சம்பளத்திட்டத்தில் தொடர்புடைய துறையில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுச் சங்க ஊழியர் உயர்தரம் அல்லது க. பொ. த. உயர்தரம் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி. அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் விற்பனவு/பொருட்கள் வழங்குதலும் மற்றும் விநியோகமும், பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இரண்டு வருடங்களுக் குறையாத அனுபவம்.

பொதுமுகாமையாளர்
நல்லூர்
ப நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
5144



விளம்பரம்
பருத்தித்துறை
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வ/து)
பகிரங்க
ஏலவிற்பனே
வெற்றுச்சாக்கு

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 7000 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 20-11-82 சனிக்கிழமை காலே 10-00 மணிக்கு களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனே செய்யப்படும்.

ஏலக்கூற்றில் வெற்றிபெறுவோர், ஏலத்தில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீதுபெற்று தமக்குரிய பொருட்களே உடன் ஏற்றிச்செல்லுதல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
பரு ப நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை.
1982-11-10. 5148



மனேகரா யாழ் நகர்
தினசரி 4 காட்சிகள்
அழகே உன்னே
ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்க்கு)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌன
கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

16-11-82 வரை
வெஸ்லி
(மானிப்பாய்) தினசரி6-15 9-15, சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
ரகசியப் பொலிஸ்-115
(கலர்-புதியபிரதி)

தித்திக்கும் தீபாவளித்
திரைவிருந்து
றீகல் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30க்கும
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதியபிரதி

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனு
காதலிக்க
நேரமில்லே
(புதிய பிரதி) (கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

கடைசி வாரம்
லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 4-30, 7-00, 9-30 சனி, ஞாயிறு 2-00
THE ARENA

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னேப்போல் ஒருவன்

தித்திக்கும் தீபாவளித் திரைவிருந்து!
சாந்தி- யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். வழங்கும்
நவரத்தினம்
A. P. நாகராஜனின் வண்ணப்படைப்பு

தினசரி 5 காட்சிகள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
"இடி அமினின்
எழுச்சியும் வீழ்ச்சியும்"
RISE AND FALL OF IDI AMIN

புரட்சிமூலம் உகண்டாவைக் கைப்பற்றிய இரத்தவெறி பிடித்த இடிஅமினேப் பார்ப்பதற்கு இன்றே வாருங்கள்!-----
அமினின் காமப்பசிக்கு இரையாகிய பெண்கள் எத்தனே! ஆட்சியின் வஞ்சனேக்குப் பலியான அப்பாவிகள் எத்தனே! நரமாமிச வேட்டைக்கு உள்ளான நீதிமான்கள் எத்தனே! இவற்றையெல்லாம் பார்த்து படிப்பினே பெற மாணவர்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் யாவரும் திரண்டு வாருங்கள்!
பாடசாலே மாணவர்க்கு பிரத்தியேக காட்சி மனேஜருடன் ஒழுங்குசெய்து கொள்ளலாம். போன் எண்: 22466

# முனீஸ்வரன் வீதி, முற்றவெளியில் நடைபாதை வியாபாரிகள்!

[யாழ்ப்பாணம்]

தீபாவளி தினத்தை முன்னிட்டு யாழ். நகர மின்சார நிலைய வீதியில் பொதுமக்களுக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் இடைஞ்சலாக இருந்து வியாபாரம் செய்த நடைபாதை வியாபாரிகள் யாழ். முனீஸ்வரன் வீதியிலும் முற்றவெளியிலும் இருந்து வியாபாரம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த வியாபாரிகளில் அரைவாசிப்பேர் சுன்னாகம் சந்தைப் பகுதியை முற்றுகையிட்டுள்ளனர் மீதிப்பேர் யாழ். முனீஸ்வரன் வீதியில் வியாபாரம் செய்கின்றனர்.

சுன்னாகம் சந்தையில் நடைபாதை வியாபாரிகள் வியாபாரம் செய்வதால் புடவை வியாபாரம் பாதிக்கப்படுவதாக யாழ். மாவட்ட செயலாரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையாவிடம் சுன்னாகம் புடவைக்கடை உரிமையாளர்கள் நேற்று புகார் செய்தனர்.

இவர்களின் முறைப்பாட்டைக் கேட்டறிந்த யாழ் அரசாங்க அதிபர், சட்டரீதியாக நடைபாதை வியாபாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்றும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசாவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

தீபாவளி தினத்தை முன்னிட்டு கடந்த சில நாட்களாக யாழ் மின்சார நிலைய வீதியில் நூற்றுக்கு மேற்பட்ட நடைபாதை வியாபாரிகள் புடவை வியாபாரம் செய்தனர். இதனால் பொதுமக்களுக்கும், வாகனப்போக்குவரத்துக்கும் பெரும் இடைஞ்சலாக இருந்ததுடன், புடவைக்காரர்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டிருந்தது.

இதுசம்பந்தமாக யாழ். மாநகரசபைத் தலைவருக்கும், ஆணையாளருக்குமே கிடைத்த புகார்களைத் தொடர்ந்து இருவரும் நடைபாதை வியாபாரிகளை அகற்றி முனீஸ்வரன் ஆலய வீதி, திறந்தவெளி அரங்கு, பெரிய தபால் சந்தோர் பக்கமாக இவர்களை விடுமாறு, மாநகர உத்தியோகத்தர்களைப் பணித்ததுடன் பொலிசாருக்கும் தெரிவித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம், மேற்குறிப்பிட்ட இடத்திலிருந்து நடைபாதை வியாபாரிகளை பலத்த எச்சரிக்கை மூலம் பொலிசார் அகற்றியது குறிப்பிடத்தக்கது. (மா)

## காலிச் சம்பவம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்சம்பவத்திற்குக் காரணமாகும் இந்த பொலிஸ் நிலையத்தில் 150 பொலிஸார் எந்த நேரமும் இருக்க வேண்டும்''

### பொலிஸ் அதிபர்

சாட்சியமளித்த தலைமை அலுவலக பொலிஸ் அதிபர் கோபார்ட் காமினி குணவர்த்தனவை சட்டத்தரணி எம். வை. எம். பயஸ் குறுக்கு விசாரணை செய்தார். அப்பொழுது பொலிஸ் அதிபர் கூறியதாவது: 11 தொடர்பாக பல இடங்களில் பலமுக்கிய புள்ளிகளை கைது செய்தேன். 135 சிங்களவர்களையும் 107 முஸ்லிம்களையும் கைது செய்தேன்.

காலியில் நடந்த சம்பவத்தில் 50 லட்சத்திற்கு மேல் நஷ்டமேற்பட்டதா? – இல்லை

சட்: சம்பவத்தின் போது பொலிஸாரும் காணப்பட்டனரா? – தெரியாது.

சட்; கலவரத்திற்கு காரணம் என்ன? வர்த்தகப் போட்டி

சட்: போதிய பொலிஸார் இல்லாததனால் கலவரத்தை கட்டுப்படுதத முடியவில்லை? — ஆம்.

சட்; கலவரம் நடந்த இடத்திற்கும் பொலிஸ் நிலையத்திற்கும் அதிக தூரம்? – ஆம்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (இ)

## சு. க. செயலாளர் பனுகொடை முகாமில்

(மகாபூபு)

சிறீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளர் திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்காபனுகொடை இராணுவ முகாமில் இரகசியப் பொலிசாரினல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ—வெ)

## மினி பஸ் ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். மாநகரசபை அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் அடிக்கடி புகார் செய்ய படுவதைத் தொடர்ந்து மினிபஸ்களை முற்றவெளிப்பகுதிக்கு மாற்றுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள், பொலிஸார் உதவியுடன் அங்காடி வியாபாரிகளை குறிப்பிட்ட இடத்திலிருந்து அப்புறப்படுத்தியது போல் மினிபஸ்களும் அப்புறப்படுத்தப்படும் என்று அந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதான பாதைகளில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் மீதும் ஒருவழிப்பாதை சட்டத்தை மீறிசெல்லும் வாகனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் போக்குவரத்துப்பிரிவு பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (மா)

## நீர்வேலி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ் வழக்கில் ஆரம்பவிசாரணையின்போது சமூகமாகவிருந்த அரசாங்க பகுப்பாளர் வெளிநாடு செல்வதாகவும் இம்மாதம் 10ம் திகதி நாடு திரும்புவதாகவும் தெரிவித்திருந்தார். அவர் இதுவரை நாடு திரும்பியிருப்பாரென்றும், அவரது அறிக்கை கிடைக்க ஆவனசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. சண்முகம் சேனதிராசா நேற்றும் தொடர்ந்தும் சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

25ம் திகதி மார்ச் 81ம் ஆண்டு யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தைச் சேர்ந்த சவரிமுத்துவிடம் வங்கியில் சேர்நத பணத்துடன் இருபது பக்கட்டுகளில் வெளிநாட்டுக் காசோலை, காசு ஆகியவற்றை கையளிததேன். அவற்றில் பத்து நோட்டுகளை இம்மாதம் 9ம் திகதி விசாரித்தபோது அடையாளம் காட்டினேன்''

சாட்சியை சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா குறுக்குவிசாரணைசெய்தார்,

கே: வல்வெட்டித்துறை கடத்தலுக்கு ஒரு பெயர் பெற்ற கேந்திர ஸ்தானமாக விளங்குகின்றதா?

ப; ஆம்;

கே: வல்வெட்டித்துறையில் இராணுவமுகாம்இருக்கிறதா?

ப: ஆம்.

கே: கடற்படைமுகாம் இருக்கிறதா?

ப: இல்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறும். (இ)

## ஜனாதிபதி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. மக்கள் இம்மாதம் 14ம் தேதி வரை காலை 10 மணி முதல் 1 மணி வரை, பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை அனுதாபச் செய்திகளை எழுத ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## அமிர்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிட்டுள்ளதாவது:- ஒரு பெரும் வல்லரசின் அதிககரமிக்க ஜனாதிபதியாகவும், ஆட்சித் திறமைள்யுள அரசியல் தலைவராகவும் விளங்கிய ஜனாதிபதி லியோனித் பிரஷ்நேவ் உலக அமைதிக்கும், விடுதலை இயக்கங்களுக்கும் தலை சிறந்த வழிகாட்டியாகவும், உற்ற தோழராகவும் விளங்கியவர் அன்னரின் மறைவு உலகின் அமைதிக்கும், விடுதலை விரும்பிகளுக்கும் பேரிழப்பாக அமைந்துவிட்டது''.

(சங். நிருபர்–உ)

## 83 ஜூலை----

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் பாராளுமன்ற குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

திருகோணமலை எம். பி திரு. சம்பந்தன் மட்டும் இக்கூட்டத்துக்கு வரவில்லை அவர் வெளிநாடு சென்றுள்ளார்.

1983 ஜூலை 22ல் இப்பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதாகவும், இதற்கு மேல் பாராளுமன்ற பதவிக்காலம் நீடிப்பதை ஆட்சேபித்து ராஜினமா செய்து கொள்வதென்ற முடிவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, ஒரே ராஜினமாக் கடிதத்தில் கையெழுத்திட்டுக் கொள்வதென்று கூட்டத்தில் முடிவு எடுத்தனர்

இதற்கமைய சகல எம்.பி.க்களும் ஒரே கடிதத்தில் கையெழுத்திட்டு, திரு. அமிர்தலிங்கத்திடம் சமர்ப்பித்தனர். திரு. சம்பந்தன் இங்கு வந்து சேர்ந்ததும், அவரும் கையெழுத்திட்ட பின்னர், அதனைப் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் வாக்காளர்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பை தமிழர் கூட்டணி ஏன் எதிர்க்கிறதென்பதை விளக்கி கடிதமொன்றை அனுப்பிவைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

சர்வஜன வாக்கெடுப்பை ஏன் எதிர்க்கிறோம் என்றும் ஏன எதிர்தது வாக்களிபபதென்றும் விளக்கி துண்டுபிரசுரமொன்றையும் வெளியிடுவதென்றும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

சர்வஜன வாக்கெடுப்பு சம்பந்தமாக கூட்டணியின் நிலைமையை விளக்கி நாட்டின் பலபகுதிகளிலும் கூட்டங்கள் வைக்கப்படவுள்ளது. முதலாவது கூட்டம் இன்று வவனியா, மன்னர், சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடாத்தப் படும்.

யாழ்ப்பாணத்தில் இம் 18ம் திகதி நடாத்தப்படும. மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலும் கூட்டங்கள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## ஐ. நா....

(1-ம்பக்கத் தொடர்ச்சி]

நேசையா, கவலை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் தினக் கொண்டாட்டம் யாழ். பரியோவான் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது திரு. தேவநேசன் நேசையா தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தபால் போக்குவரத்துச் சேவையில் சிலதடங்கல்கள் ஏற்பட்டதும் ஐ நா. தினம் சிறப்பாகக் கொண்டாட முடியாததற்கு ஒரு காரணம் எனக் குறிப்பிட்ட யாழ். அரசாங்க அதிபர், ஒரிருவாரங்களுக்குள் இத்தினத்தைக் கொண்டாட வேண்டியேற்பட்டதென்றும் தெரிவித்தார்.

இக்கொண்டாட்டத்தில் இலங்கை ஐ. நா. அலுவர் திரு குலசிங்கவும், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு சு. நடராசா வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. திரு சிமியாம்பிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர்

கல்லூரிகளின் மாணவ மாணவிகளே பார்வையாளர்களிகளில் அதிகமானோர் என்பது குறிப்பிடத்தக்கது.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் நியமனப்பத்திரம் கையளித்த நிகழ்ச்சியைப் பார்த்தபோது தெரியவந்ததென்றும், வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி ஐ தே கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும விதத்தில் திரு. கொப்பேகடுவவின் நடத்தைபற்றி அத்துலத் முதலி இவ்வாறு தெரிவித்துள்ளாரென்றும் அம்மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ—வெ)


## 31ம் நாள் வீட்டுக்கிருத்தியமும் சபிண்டீகரண அழைப்பிதழும்



16–10–82ல் காலமான எங்கள் குடும்பத்தலைவராகிய பூதத்தம்பிஇராமலிங்கம் கனகசபை (சிறைச்சாலை உத்தியோகஸ்தர் கோப்பாய்) அவர்களின் ஈமக்கிரியைகளில் பங்குபற்றி உதவி ஒத்தாசை புரிந்த அன்பர்கள் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் 15–11–82 திங்கட்கிழமை நண்பகல் 11 மணியளவில் நடைபெறவிருக்கும் அன்னரது மேற்படி வைபவங்களில் பங்கு பற்றுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

இப்படிக்கு
மனைவி, மக்கள், மருமகன்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.

பூதர்வளவு
அச்செழு

5152

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

82, கன்னதிட்டி றேட்
யாழ்ப்பாணம். போன்: 24310

## வெல்டிங் இயந்திர விற்பனை

புதிய நிலையில் உள்ள வெல்டிங் இயந்திரம் சபயர் "O" றிங்ஸ் கலவை செய்யும், வெட்டும் உறுப்புகள் இணைக்கப்பட்டது ஒக்சிஜன், அசெற்றிலீன் சிலிண்டர்களுடன் கூடியது விற்பனை செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் பதிவுத்தபாலில் மனேஜர், ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82 கன்னதிட்டி றேட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 22 – 11 – 82 ந் திகதி நண்பகல் 12–00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under numbre Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 2412?